**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண். 66/2022**

**வா.சா. 2– சோலச்சி**

**நாள். 05.11.2024.**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.**

**1 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**குறுக்கு விசாரணை – இல்லை**

**22 முதல் 26 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் வாதி குணசீலன் சொல்லிதான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கின் நான்குமால்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் ஓரளவு தெரியும். வடக்கே என் நிலம் இருந்தது. வாதி குணசீலன் எத்தனை சொத்துக்களுக்கு வழக்குபோட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் பொய்யான ஆவணங்கள் தயார் செய்து வழக்கு போட்டதாக சொல்லியுள்ளேன் அது எப்போது, யாரால் தயார் செய்யப்பட்டது என்பது தெரியாது. அந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. கைலாசம் என்பவருக்கு எவ்வளவு சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்ற அளவுகள் தெரியாது. அங்கங்கு சொத்துக்கள் உள்ளன. தாவா சொத்தில் எத்தனை பத்திரங்கள் ஏற்பட்டன என்று தெரியாது. வாதி குணசீலன் எனக்கு என்ன உறவு முறை என்றால் என் பேரனுக்கு பேரன் முறை ஆகும். தாவா வழக்கு சொத்துக்களை விஜயசாந்தி, பாலமுருகன், ஜெயபாலன், சீனிவாசன், தனபாலன் ஆகியோர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வாதி குணசீலன் எனக்கு கொள்ளுப் பேரன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை– இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.11.07 12:44:55 +0530

Additional District Judge,

Dindigul.